# மாதிரி தேர்வு – 2

## தமிழ்

### (ஒன்பதாம் வகுப்பு இரண்டாம் பருவம்)

நேரம் : 40 **Min**

வினாக்கள்: 50

1. திருக்குறளுக்கும் எந்த எண்ணுக்கும் அதிக தொடர்புள்ளது?

அ. 133 ஆ. 1330 இ. 7 ஈ. 9

2. காமராசர் ஆட்சிக் காலத்தில் கல்வியமைச்சராக இருந்தவர்?

அ. சி.சுப்ரமணியம் ஆ. ஆர்.வெங்கட்ராமன்

இ. ஓமந்தூர் ராமசாமி ஈ. சத்தியமூர்த்தி

3. ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற செம்மொழியைப் போற்ற கூறியவர்?

அ. திருமூலர் ஆ. கி.ஆ.பெ இ. மீரா ஈ. மு.வ

4. பகுதி மட்டும் தொழிலைக் குறிப்பது……

அ. முதனிலை திரிந்த தொழிற்பெயர் ஆ. முதனிலை தொழிற்பெயர்

இ. பண்புப் பெயர் ஈ. தொழிற்பெயர்

5. மாட்சி என்பது …… ஆகும்

அ. தொழிற்பெயர் ஆ. பண்புப்பெயர்

இ. வினையாலணையும் பெயர் ஈ. முதனிலை தொழிற்பெயர்

6. பொருந்தாது எது?

அ. விடை - 8 ஆ. வினா – 6

இ. வழு - 6 இ. வழா – 6

7. என் மாமா வந்தது என்பது……?

அ. திணை வழு ஆ. பால்வழு இ. இடவழு ஈ. வினாவழு

8. வல்லினம் மிகு இடங்களில் தவறானது எது?

அ. உவமைத்தொகையில் வல்லினம் மிகும்

ஆ. பண்புத்தொகையில் வல்லினம் மிகும்

இ. இரண்டாம் வேற்றுமையில் வல்லினம் மிகும்

ஈ. முற்றியலுகரத்தின் பின் வல்லினம் மிகும்

9. ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பது அந்த நாட்டுமக்கள் பெற்றிருக்கும் கல்வி, அறிவாற்றல் ஆகியவற்றைப் பொருத்தே அமைகிறது என்று கூறியவர் யார்?

அ. சுபாஷ் சந்திர போஸ் ஆ. முத்துராமலிங்க தேவர்

இ. விவேகானந்தர் ஈ. மு.வரதராசனார்

10. கல்வி வளர்ச்சி நாளாகக் கொண்டாடப்படும் நாள் எது?

அ. ஜுலை 05 ஆ. ஜுலை 15 இ. ஜுன் 15 ஈ. ஜுன் 05

11. வையகமெல்லாம் எமதென்று எழுதுமே இக்கூற்றுக்குரிய அரசன்?

அ. பாண்டியன் ஆ. சேரன் இ. சோழன் ஈ. பல்லவன்

12. சிற்றிலக்கியங்கள் ………… எத்தனை வகைப்படும்?

அ. 99 ஆ. 96 இ. 90 ஈ. 98

13. தவறாக பொருந்தியுள்ளது எது?

அ. தந்துய்ம்மின் = தந்து + உய்ம்மின்

ஆ. பூட்டுமின் = பூட்டும் + இன்

இ. நாத்தொலைவில்லை = நா + தொலைவு + இல்லை

ஈ. நல்லறம் = நன்மை + அறம்

14. முறையான சொற்றொடரை தேர்க:

அ. உடம்பை வளர்த்தேன் உடல் வளர்த்தேனே.

ஆ. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே.

இ. உடம்பை வளர்த்தேனே உயிர் வளர்த்தேன்.

ஈ. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்.

15. அறுசுவையின் பயன்களில் தவறற்றது எது?

அ. இனிப்பு – ஆற்றல் ஆ. உவர்ப்பு – மென்மை

இ. துவர்ப்பு – வளம் ஈ. புளிப்பு - இனிமை

16. செய்யுளில் இருபொருள்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையைக் கூறிப் பின்னர், அவற்றை வேறுபடுத்திக் காட்டுவது.........

அ. உவமையணி அ. பிறிதுமொழிதல் அணி

இ. வேற்றுப்பொருள் வைப்பணி ஈ. வேற்றுமையணி

17. தவறாக பொருந்தியுள்ளது எது?

அ. மாமுன் நேர் வருவது – நேரொன்றாசிரியத்தளை

ஆ. விளம்முன் நிரை வருவது – நிரையொன்றாசிரியத்தளை

இ. கனிமுன் வருவது – ஒன்றாத வஞ்சித்தளை

ஈ. காய்முன் நேர் வருவது – கலித்தளை

18. ரூபாயத் என்பது.........

அ. நான்கடிச் செய்யுள்   ஆ. ஆறடிச் செய்யுள்

இ. பத்தடிச் செய்யுள்   ஈ. மூன்றடிச் செய்யுள்

19. தண்டமிழ் ஆசான் இவ்வடிகளால் குறிக்கப்படுபவர் யார்?

அ. திருநாவுக்கரசர்  ஆ. வாகீசர்  இ. சாத்தனார்  ஈ. அறவணடிகள்

20. பரணிக்கோர் செயங்கொண்டார் எனக் கூறியவர் யார்?

அ. திரு.வி.க ஆ. ஒட்டக்கூத்தர் இ. உ.வே.சா  ஈ. சொக்கநாதபுலவர்

21. ஒருமை பன்மை பிழையை சுட்டுக:

அ. தலைவர் நாளை மதுரையில் பேசுவார்

ஆ. என் புத்தகம் இதுவன்று

இ. என் புத்தகம் இவையல்ல

ஈ. நேற்று மழை பொழிந்ததது.

22. 1. இடம் பொருளுக்கு ஆகி வருவது - இடவாகுபெயர்

2. பொருள், இடத்திற்கு ஆகி வருவது – தானியாகுபெயர்

அ. 1,2 சரி  ஆ. 1,2 தவறு  இ. 2 மட்டும் சரி  ஈ. 1 மட்டும் சரி

23. சாதுவன் கடல் வாணிகம் மேற்கொண்டான் என்னும் குறிப்பு எந்த நூலில் காணப்படுகிறது?

அ. மணிமேகலை ஆ. சிலப்பதிகாரம் இ. புறநானூறு  ஈ. அகநானூறு

24. தமிழில் தோன்றிய முதல் பரணி இலக்கியம்......

அ. தக்கயாகப் பரணி  ஆ. மோகவதைப் பரணி

இ. கலிங்கத்துப் பரணி  ஈ. வங்கத்துப் பரணி

25. இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்

துறந்தார் துறந்தார் துணை - இவ்வடிகளில்

பயின்று வந்துள்ள பொருள்கோள்...

அ. தாப்பிசைப் பொருள்கோள் ஆ . பூட்டுவிற்பொருள்கோள்

இ. கொண்டுகூட்டு பொருள்கோள் ஈ. மொழிமாற்றுப் பொருள்கோள்

26. அமுத சுரபி முற்பிறப்பில் யாரிடத்தில் இருந்தது?
அ. தீவதிலகை ஆ. காயசண்டிகை இ. ஆபுத்திரன் ஈ. ஆதிரை

27. எனக்கிடர் உண்டென்று இரங்கல் வேண்டா...இக்கூற்றுக்குரியவர்?

அ. ஆதிரை ஆ. அரசமாதேவி இ. அறவணடிகள் ஈ. மணிமேகலை

28. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனக் கூறாதது?

அ. புறநானூறு ஆ. மணிமேகலை இ. அ மற்றும் ஆ ஈ. அகநானூறு

29. நோய்க்கு முதற்காரணம் எது?

அ. சர்க்கரை ஆ. உப்பு இ. அதிகம் உட்கொள்ளல் ஈ. காரம்

30. வள்ளலார் கண்ட ஞானப்பச்சிலை எது?

அ. தூதுவளை ஆ. கரிசலாங்கண்ணி இ. கற்றாழை ஈ. குப்பைமேனி

31. குமரி கண்ட நோய்க்கு குமரி கொடு -இவ்வடிகளில் குமரி என அழைக்கப்படும் மூலிகை எது?

அ. தூதுவளை ஆ. கற்றாழை இ. துளசி ஈ. கரிசலாங்கண்ணி

32. பொருந்தாது எது?

அ. வெ.்.கல் - பெருவிருப்பம் ஆ. வெகுளல் - கடுஞ்சினம்

இ. குறளை - புறம்பேசுதல் ஈ. பொல்லாக்காட்சி – மாயத்தோற்றம்

33. இலக்கணக்குறிப்பு (சரியற்றது) :

அ. அரைசன் - இடைப்போலி

ஆ. பொல்லாக் காட்சி - ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சம்

இ. காமத்தீ – உவமைத்தொகை

ஈ. ஆழ்நரகு – வினைத்தொகை

34. உமர்கய்யாம் எந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்?

அ. பத்தாம் நூற்றாண்டு ஆ. பதினேழாம் நூற்றாண்டு

இ. பதினோராம் நூற்றாண்டு ஈ. பன்னிரெண்டாம் நூற்றாண்டு

35. **What comes from the cradle goes to grave** இணையான தமிழ்ப் பழமொழியை அறிக.

அ. பணம் பத்தும் செய்யும்

ஆ. பல நாள் திருடன் ஒரு நாள் அகப்படுவான்

இ. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டில்

ஈ. பழி ஓரிடம் பாவம் ஓரிடம்

36. பொருந்தாது எது?

அ. அங்கத்தினர் ஆ. தொடக்கம் இ. திறவுகோல் ஈ. விளக்கு

37. பாலை இறக்கு எவ்வகை ஆகுபெயர்?

அ. தானியாகுபெயர் ஆ. இடவாகுபெயர்

இ. காரியவாகு பெயர் ஈ. பொருளாகுபெயர்

38. தமிழ்மொழி ஒன்றுக்கே உரிய சொல் எது?

அ. உரைகல் ஆ. சான்றோன் இ. சான்றாண்மை ஈ. ஒழுக்கம்

39. திரு.வி.க பற்றிய கூற்றுகளில் சரியற்றது எது?

1. நான் தனியாக வாழவில்லை தமிழரோடு வாழ்கிறேன் என்றார்.

2. மேடைத்தமிழின் முன்னோடி

3. உரைநடை எழுதுவது எனது தொழில் என்றார்

4. தமிழை வளர்க்க வேண்டும் என்றால் பிறமொழியை வெறுக்க வேண்டும் என்பது பொருளாகும் என்றார்.

அ. ஏதுமில்லை ஆ. 2 மட்டும் இ. 1 2 மட்டும் ஈ. 1,4 மட்டும்

40. திரை கடலோடியும் திரவியம் தேடு என்று கூறியவர் யார்?

அ. ஔவையார் ஆ. பாரதியார் இ. தமிழ்மகள் ஈ. அ (ம) இ

41. கல்தோன்றா மண்தோன்றா காலத்தே வாளொடு முன்தோன்றிய மூத்தக்குடி என தமிழினத்தின் தொன்மையை குறிப்பிடும் நூல்?

அ. புறநானூறு ஆ. தொல்காப்பியம்

இ. புறப்பொருள் வெண்பாமாலை ஈ. மணிமேகலை

42. முத்தொள்ளாயிரத்தில் புறத்திரட்டு என்னும் நூல் வாயிலாக கிடைக்கப்பெற்ற வெண்பாக்களின் எண்ணிக்கை?

அ. 22 ஆ. 118 இ. 108 ஈ. 128

43. பல்யானை மன்னீர் படுதிரை தந்துய்ம்மின்

மல்லல் நெடுமதில் வாங்குவில்.

இப்பாடலில் பயின்று வந்துள்ள அணியைச் சுட்டுக.

அ. தற்குறிப்பேற்ற அணி ஆ. உவமையணி

இ. உருவக அணி ஈ. பிறிதுமொழிதல் அணி

44. முட்டையிட்டது சேவலா பெட்டையா? எவ்வகை வழு?

அ. வினா வழா ஆ. பால்வழு இ. மரபு வழு ஈ. வினாவழு

45. பொருந்தாத சொல்லை தேர்க:

அ. பெறு ஆ. சுடு இ. கெடு ஈ. வீடு

46. தொழிற்பெயர் பற்றியதில் சரியற்றது எது?

அ. தொழிலுக்குப் பெயராய் வரும்

ஆ. படர்க்கை இடத்தில் வரும்

இ. காலம் காட்டும்

ஈ. இவை அனைத்தும்

47. தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமைப்படுத்தவல்லது - இக்கூற்றுக்கு உரியவர்?

அ. மீரா ஆ. திரு.வி.க இ. வ.ரா ஈ. மு.வ

48. சுரதாவின் எந்த நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறை விருதைப் பெற்றது?

அ. தேன்துளிகள் ஆ. துறைமுகம் இ. தேன்மழை ஈ. இன்பம்

49. செவிக்குணவாவது எது?

அ. புகழ் ஆ. கேள்வி இ. மகிழ்ச்சி ஈ. பெருமை

50. ஒற்கம், ஆன்ற, நுணங்கிய என்ற சொல்லின் பொருள் முறையே

அ. தளர்ச்சி, நிறைந்த, நுட்பமாகிய

ஆ. தளர்ச்சி, நுட்பமாகிய, நிறைந்த

இ. நிறைந்த, தளர்ச்சி, நுட்பமாகிய

ஈ. நுட்பமாகிய, நிறைந்த, தளர்ச்சி